


**01. 08. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் சிவில் விமான போக்குவரத்து துறை பிரம்மாண்ட வளர்ச்சி கண்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. தொன்மையான தமிழ் கலாச்சாரம் பாதுகாத்து பராமரிக்கப்பட வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அறிவுறுத்தியுள்ளார்.

3. மாணாக்கர் உயர்கல்வியை தொடர பொருளாதாரம் தடையாக இருக்க கூடாது என்ற நோக்கில் கல்வி கடன் வழங்கப்படுவதாக மாநில அமைச்சர் திரு. அருண் ராஜ் கூறியுள்ளார்.

4. தமிழ்நாட்டின் உயிர் நாடியான காவிரி நீர் விவகாரத்தில் முதலமைச்சர் உரிய ஆலோசனைகளை மேற்கொள்வதன் அவசியத்தை தி.மு.க. தலைவர் திரு. மு. க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

5. தாய்பே ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் இறுதிபோட்டிக்கு இந்தியாவின் Tanvi Sharma முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

************

பிரதமர்

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் சிவில் விமான போக்குவரத்து துறை பிரம்மாண்ட வளர்ச்சி அடைந்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் விஜயநகர மாவட்டம் போகாபுரத்தில் 5 ஆயிரத்து 640 கோடி ரூபாய் மதிப்பிலான விமான நிலையம் உட்பட 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்துறை திட்டங்களை இன்று தொடங்கிவைத்து பிரதமர் உரையாற்றினார்.

2014-ம் ஆண்டு 74 விமான நிலையங்கள் மட்டுமே செயல்பாட்டில் இருந்ததாக சுட்டிக்காட்டிய பிரதமாம், தற்போது அது 166-ஆக உயர்ந்துள்ளதாக எடுத்துரைத்தார்.

பெருநகரங்களில் மட்டுமே இருந்த விமான போக்குவரத்து வசதி தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் சிறிய நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டதாக குறிப்பிட்டார்.

இதனால் சாமானிய மக்களும் தற்போது விமான பயணங்களை மேற்கொள்வதாக பிரதமர் கூறினார்.

************

நிர்மலா சீதாராமன்

தொன்மையான தமிழ் கலாச்சாரம் பாதுகாத்து பராமரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் பன்னிரு திருமுறைகள் திருச்செந்தூர் தலபுராணம் தொடர்பான புத்தக வெளியீட்டு விழாவில் இன்று உரையாற்றிய அவர், இலக்கியத்தின் வளத்தை செறிவூட்ட தமிழ் மொழியால் இயலும் என்று குறிப்பிட்டார்.

பழங்காலங்களில் தமிழர்கள் பின்பற்றிய சைவ மரபுகளை இப் புத்தகங்கள் வெளிப்படுத்துவதாகவும் இளையோர் இதனை படித்து நம் பண்டைய கலாச்சாரங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

************

குடியரசு தலைவர்

பொதுத்தேர்வு முறைகேடுகள் சட்டத்திருத்த மசோதாவிற்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட இம்மசோதாவில் வினாத்தாள் கசிவு உள்ளிட்ட தேர்வு முறைகேடுகளில் ஈடுபடுவர்களுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை, 10 கோடி ரூபாய் அபராதம் சொத்து பறிமுதல் உள்ளிட்ட கடும் தண்டனைகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

************

சரக்கு சேவை வரி

நாட்டில் சென்ற மாதம் 2 லட்சத்து 11 ஆயிரத்து 205 கோடி ரூபாய் சரக்கு சேவை வரி வசூலானதாக மத்திய நிதியமைச்சகம் கூறியுள்ளது.

இது சென்ற ஆண்டின் இதே காலத்தைவிட 15.4 சதவிகிதம் அதிகம் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டு உற்பத்தி வருவாய் ஒரு லட்சத்து 44 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளதாகவும் இது 10.1 சதவிகிதம் அதிகம் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது..

இறக்குமதிகள் மூலம் கிடைக்கப்பட்ட சரக்கு சேவை வரி 28.8 சதவிகிதம் கூடுதலாகும் என்று கூறியுள்ள அமைச்சகம் இதன்மூலம் ஒட்டுமொத்த ஜூலை மாத சரக்கு சேவை வரி உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

************

அருண் ராஜ்

தமிழ்நாட்டில் 22 மாவட்ட அரசு மருத்துவமனைகளில் செயல்படும் நலம் AI செயலி வசதி மூலம் பொதுமக்கள் வீட்டிலிருந்தே மருத்துவ சேவைகளை பெற்றுக்கொள்ளுமாறு மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண் ராஜ் கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் 47 மாணவ மாணவிகளுக்கு மூன்றரை கோடி ரூபாய் மதிப்பில் கல்வி கடன் வழங்கி உரையாற்றிய அமைச்சர் மாநிலத்தில்

மாணவ மாணவிகள் உயர்கல்வியை தொடர பொருளாதாரம் ஒரு தடையாக இருக்க கூடாது என்ற நோக்கில் கல்வி கடன் வழங்கப்படுவதாக எடுத்துரைத்தார்.

வாய்ஸ்

சுகாதார வீதி திட்டத்தை முன்னெடுத்து செல்லும் வகையில் சாலையோர விற்பனையாளர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் அண்மையில் வழங்கப்பட்டதாகவும் கூறினார்.

ஏற்கனவே 6 மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறையில் இருப்பதாகவும் விரைவில் திருச்செங்கோட்டில் உணவு வீதி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

************

நிர்மல்குமார்

தமிழகத்தில் மின்துறையில் கூடுதல் பணியாளர்கள் நியமனத்திற்கு பின்னரே மாதாந்திர மின் கணக்கீடு பணிகள் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில மின்துறை அமைச்சர் திரு.நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின் கணக்கீடு தொடர்பாக பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் 10 ஆயிரம் மின் இணைப்புகளில் சரிபார்ப்பு பணிகள் நடைபெற்றதாக கூறினார்.

கோடை காலத்தில் மக்கள் அதிக அளவில் மின்சாரம் பயன்படுத்தியதாக கூறிய அவர், கூடுதல் கட்டணம் தொடர்பான 3 லட்சத்து 70 ஆயிரம் மின் இணைப்புகள் ஒருவாரத்திற்குள் சரிபார்க்கப்படும் என்றார்.

மேகதாது அணை விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தை நாடுவதே தீர்வாக அமையும் என்றார்.

************

மு.க.ஸ்டாலின்

தமிழ்நாட்டிற்கு தண்ணீர் தர முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்துள்ள கர்நாடகத்தை சட்ட ரீதியாக

அணுகுவதன் அவசியத்தை தி.மு.க. தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டின் உயிர் நாடியான காவிரி விவகாரத்தில் முதலமைச்சர் உரிய ஆலோசனைகளை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார்.

மேகதாது அணை விவகாரத்தில் கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது எவ்வித பயனும் அளிக்காது என்பதை அனைவரும் எடுத்துரைத்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

காவிரி பிரச்சனையில் கர்நாடகத்தில் அனைவரும் ஒற்றுமையாக இருப்பதை சுட்டிக்காட்டிய திரு.ஸ்டாலின் இவ்விவகாரத்தில் அனைத்து கட்சி கூட்டத்தை முதலமைச்சர் கூட்டுவது எப்பொழுது என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

************

J C D பிரபாகர்

தமிழ்நாட்டில் மக்களின் குறைகள் விரைந்து தீர்க்கப்பட வேண்டும் என்பதே முதலமைச்சரின் விருப்பம் என்று தமிழக சட்டப்பேரவை தலைவர் திரு. J C D பிரபாகர் தெரிவித்துள்ளார்.

சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் மாற்றுத்திறனாளி மாணாக்கருக்கான சேவை மையத்தை இன்று திறந்து வைத்து பேசிய அவர், மாற்றுத்திறனாளிகள் துறை மாநிலத்தில் வேகமாக முன்னேறி வருவதன் அடையாளமாக இந்த மையம் திகழ்கிறது என்றார்.

************

மக்கள் தொகை கணக்கெடுப்பு

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் இன்று தொடங்கின.

வரும் 30ஆம் தேதிவரை நடைபெறும் இப்பணியில் ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்ட கணக்கெடுப்பாளர்கள் களப்பணிகளை மேற்கொள்கின்றனர்.

வேலூர் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் மக்கள் தொகை கணக்கெடுப்பு கள

பணிகளில் ஈடுபட உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி லீலா அலெக்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆன்லைன் பதிவு மேற்கொண்டவர்கள் அது தொடர்பான எண்ணை வழங்கினால் சரிபார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என ஆட்சித்தலைவர் கூறினார்.

வாய்ஸ்

தர்மபுரியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சரவணன் இன்று தொடங்கிவைத்தார்.

வரும் 30ஆம் தேதிவரை நடைபெறும் இப்பணிகளில் மூன்றாயிரத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபடுவார்கள் என்று அவர் கூறினார்.

************

தாய்பால் வார விழா

உலக தாய்பால் வார விழா இன்றுமுதல் வரும் 7ஆம் தேதிவரை கடைபிடிக்கப்படுகிறது.

நிலையான பாதுகாப்பிற்கு தாய்பால் என்பதை வலியுறுத்தும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

குழந்தையின் வளர்ச்சி ஆரோக்கியம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க தாய்ப்பால் மிகவும் அவசியம் என திருச்சி மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் திட்ட அலுவலர் திருமதி நித்யா தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

சேலத்தில் தாய்ப்பால் விழிப்புணர்வு, வாக்கத்தான் நடை பயணத்தில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

************

நெல்லை

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் கன மழை காரணமாக நெல்லை மாவட்டம் பாபநாசம், சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் வேகமாக அதிகரித்து வருகிறது.

143 கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 5 அடி உயர்ந்து தற்போது 69.35 அடியாக உள்ளது.

திருக்குறுங்குடி நம்பியாற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதால் மலைகோவிலுக்கு செல்லவும் ஆற்றுப்பகுதிக்குள் குளிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

தேனி சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் அங்கு குளிக்க வனத்துறை தடைவிதிக்கப்பட்டுள்ளது.

************

இருவரி

தூத்துக்குடியில் மத்திய அரசின் இளைஞர் நலன் விளையாட்டுத்துறை அமைச்சகம் சார்பில் வளர்ச்சி அடைந்த பாரதத்தில் இளையோர் மற்றும் போதையில்லா இளைஞர்களை உருவாக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் குடும்ப அட்டையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் கைவிரல் ரேகை பதிவு மேற்கொள்ள ஏதுவாக நாளை நியாயவிலைக்கடைகளில் சிறப்பு முகாம் நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திரு.ஶ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் மாணவர்கள் பாதுகாப்பான பேருந்து பயணம் மேற்கொள்வது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

படிகட்டில் பயணம் மேற்கொள்வதால் ஏற்படும் ஆபத்தை உணர்ந்து விதிமுறைகளை பின்பற்றுவதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

உதகையில் மத்திய அரசின் ஹிந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிலிம் தொழிற்சாலையில் வெள்ளி கலந்த மண்ணை திருடிய வழக்கில் மேலும் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த தொழிற்சாலை வன கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் சட்ட விரோத மணல் அள்ளும் குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில் இந்நடவடிக்கை.

************

யானை

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே கரியசோலை பகுதியில் காட்டு யானை தாக்கியதில் தேயிலை தோட்ட தொழிலாளி உயிரிழந்தது அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

காட்டு யானைகளால் விளை நிலங்கள், மனித உயிர்களுக்கு ஏற்படும் ஆபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

************

பேட்மிண்டன்

தாய்பே ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் இறுதிபோட்டிக்கு இந்தியாவின் Tanvi Sharma முன்னேறியுள்ளார்.

அரையிறுதியில் தைவானின் Huang-ஐ 21-17 21-11 என்ற நேர் செட்களில் இன்று Tanvi Sharma வென்றார்.

************

காமன்வெல்த்

கிளாஸ்கோவில் நடைபெறும் காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளின் குத்துச்சண்டை பிரிவில் ஒலிம்பிக் வீராங்கனை லவ்லீனா தலைமையில் 10 இந்திய வீர வீராங்கனைகள் இறுதி போட்டிகளில் இன்று களமிறங்குகின்றனர்.

அரையிறுதி போட்டியில் நேற்று வென்ற இந்த 10 பேரின் மூலம் வெள்ளிப்பதக்கங்கள் நமக்கு உறுதியாகியுள்ள அதேவேளையில், நடப்பு காமன்வெல்த் போட்டிகளில் இந்திய வீர வீராங்கனைகள் சிறப்பான

விளையாட்டுத்திறனை வெளிப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது..

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது